# குதிரை முட்டை

1

ஓர் ஊரில் பரமார்த்த குரு என்றொருவர் இருந்தார். அவருடன் மட்டி, மடையன், மூடன், முட்டாள், பேதை என்னும் ஐந்து சீடர்கள் இருந்தார்கள். இவர்கள் அந்த ஊரில் சொந்த மடத்தில் தங்கி இருந்தார்கள். குரு தம் சீடர்கள் மீது மிகுதியான அன்பும், சீடர்கள் குருவின் மீது மிகுதியான பக்தியும் கொண்டிருந்தனர்.

பரமார்த்த குருவும் சீடர்களும் பக்கத்து ஊர்களுக்குச் சென்று மக்களுக்கு ஆசி வழங்குவர். குருவின் ஆசியைப் பெற மக்கள் குருவிற்குக் காணிக்கை செலுத்துவர். குருவும் சீடர்களும் காணிக்கைப் பணத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

குருவிற்கு வயதாகிவிட்டதால் நீண்ட தூரம் நடக்க முடியாத நிலையை அடைந்தார். ஆகவே எப்படியாவது குருவிற்கு ஒரு குதிரை வாங்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்கள் சீடர்கள்.

"நாம் எப்படியாவது முயன்று நம் குருவிற்கு ஒரு குதிரை வாங்கியாக வேண்டும்" என்றான் மடையன்.

"நம் குரு எளிமையின் திருவுருவம். நம்மை நடக்குமாறு செய்து அவர் மட்டும் குதிரையின்மேல் அமர்ந்து சவாரி செய்ய விரும்புவாரா?" என்றான் மூடன்.

"நாம் எல்லோரும் அவர் காலில் விழுந்து மன்றாடி ஒப்புக் கொள்ளச் செய்வோம்" என்றான் முட்டாள்.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரியில்லை. முதலில் நாம் ஒரு குதிரையை வாங்கிக் கொண்டு மடத்திற்கு வந்துவிட்டால் தாமாகச் சம்மதித்து விடுவார் நம் குரு" என்றான் பேதை.

சீடர்கள் இவ்வாறு பேசிக்கொண்டே அன்று இரவு தூங்கிவிட்டார்கள். மறுநாள் காலை தூங்கி எழுந்ததும் குதிரை வாங்கக் குருவின் அனுமதியைப் பெற விரும்பினார்கள்.

‘‘குருவே, உங்களுக்கு வயதாகி விட்டது. நீண்ட தூரம் நடக்க முடியவில்லை. அதனால் நாங்கள் உங்களுக்காக ஒரு குதிரை வாங்குவதாக முடிவு செய்து விட்டோம். குதிரை இருந்தால் நாம் பல ஊர்களுக்குச் சென்று

காணிக்கையை மிகுதியாகப் பெற முடியும். ஏராளமான மக்கள் உங்கள் ஆசியைப் பெற்று ஒரு குறையும் இல்லாமல் நீண்ட நாள் உயிர்வாழ்வார்கள்" என்று சீடர்கள் கூறினார்கள்.

"சீடர்களே! உங்கள் அன்பையும் ஆர்வத்தையும் மெச்சுகிறேன். உங்களை எப்படிப் பாராட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை. குதிரை வாங்குவதாக இருந்தால், குறைந்தது நூறு வராகன் பணமாவது தேவைப்படுமே! அவ்வளவு பணம் இப்போது நம்மிடம் இல்லையே!" என்றார் குரு.



"குருவே! நாங்கள் அலைந்து திரிந்து குறைந்த விலையில் குதிரை வாங்கி விடுவோம். குதிரை வாங்கி வந்த பிறகு நீங்களே எங்கள் திறமையைக் கண்டு வியந்து மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படப் போகின்றீர்கள்" என்றான் மடையன்.

"உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும்" என்று சீடர்களை வாழ்த்தினார் குரு. குருவின் ஆசி பெற்ற சீடர்கள் குதிரை வாங்கப் புறப்பட்டார்கள்.

சீடர்கள் எங்கே சென்று குதிரை வாங்குவது என்று திட்டமிடாமல் நடந்துகொண்டே இருந்தார்கள். வழியில் பெரிய காடு ஒன்று இருந்தது. அதையும் கடந்து சென்றார்கள்.

காட்டைக் கடந்ததும் சிறிது தூரத்தில் பூசணிக் கொடிகள் அடர்ந்து படர்ந்த ஒரு தோட்டத்தில் பூசணிக்காய்கள் காய்த்திருந்தன. அந்தத் தோட்டத்தில் ஒரு கழுதையும் மேய்ந்து கொண்டிருந்தது. பரமார்த்த குருவின் சீடர்கள் இதற்கு

முன் கழுதையையும் பூசணிக்காயையும் பார்த்ததில்லை. ஆகையால் பூசணித் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்த கழுதையைச் சின்னக் குதிரை என்றும் பூசணிக்காய்களை அந்தச் சின்னக் குதிரையின் முட்டைகள் என்றும் நினைத்துக் கொண்டார்கள். முட்டைகளில் ஒன்றை விலைக்கு வாங்கி அடைகாத்து, குதிரைக் குட்டியைப் பெற நினைத்தார்கள்.

சீடர்கள் தோட்டக்காரன் இருக்கும் குடிசைக்குச் சென்றார்கள். "ஐயா அதோ மேயும் சின்னக் குதிரையின் முட்டைகள்தானே இவைகள். நாங்கள் உலகப் புகழ்பெற்ற பரமார்த்த குருவின் சீடர்கள். இந்த முட்டைகளில் ஒன்றை நீங்கள்



விலைக்குக் கொடுத்தால் நாங்கள் அடைகாத்துக் குதிரைக் குட்டியைப் பெறுவோம்" என்றான் மடையன்.

இவர்களை முழு முட்டாள்கள் என்று நினைத்தான் தோட்டக்காரன். இந்த முட்டாள் சீடர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கத் திட்டமிட்டான்.

"நீங்கள் பரமார்த்த குருவின் சீடர்களாக இருப்பதால் அறிவாளிகளாக இருக்கின்றீர்கள். அதனால் மேய்ந்து கொண்டிருக்கும் விலங்கைக் குதிரை என்றும் இதோ கீழே கிடப்பவைகளை குதிரை முட்டைகள் என்றும் உடனே கண்டுபிடித்து விட்டீர்கள்" என்று சீடர்களைப் புகழ்வது போலத் தோட்டக்காரன் கேலி செய்தான்.

"'தோட்டக்காரரே இந்த முட்டையை அடைகாத்தால் எத்தனை நாட்களில் குதிரைக் குட்டி பிறக்கும்?" என்றான் மூடன்.

தோட்டக்காரன் மூடன் கேட்ட கேள்வியைக் கேட்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

"இந்த முட்டைகளை 21 நாட்கள் அடைகாத்தால் குதிரைக் குட்டி பிறக்கும்" என்றான் தோட்டக்காரன்.

"குதிரை வாங்கப் போதுமான பணம் எங்களிடமில்லை; அதனால் குறைந்த விலையில் குதிரை வாங்க வேண்டுமென்று நினைத்தோம்; இப்போது மிகவும் மலிவான விலையிலேயே குதிரையைப் பெற்று விடுவோம்; எல்லாம் எங்கள் குருவின் ஆசிதான். ஒரு குதிரை முட்டையின் விலை என்ன?"என்றான் முட்டாள்.

தோட்டக்காரன் "நீங்கள் உங்கள் குருவிற்காகக் கேட்கிறீர்கள். அதனால் இருபது வராகன் மதிப்புள்ள குதிரை முட்டையை உங்களுக்குப் பத்து வராகன்களுக்குக் கொடுக்கின்றேன்" என்றான்.

"ஐயா நாங்கள் மடத்திற்குச் சென்று குருவிடம் சொல்லி, பணத்துடன் வருகின்றோம். வேறு யாருக்கும் விற்றுவிடாதீர்கள்" என்றான் பேதை.

சீடர்கள் ஐவரும் குதிரை முட்டையை வாங்கிவிடவேண்டும் என்ற ஆர்வத்தில் ஓட்டமும் நடையுமாக மடத்தை அடைந்தார்கள்.

"குருவே, பத்து வராகன்கள் விலையில் குதிரைமுட்டை வாங்க ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கின்றோம். என்ன இருந்தாலும் உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!. இருபது வராகன் மதிப்புடைய குதிரை முட்டையை எங்களுடைய திறமையைப் பயன்படுத்தி பத்து வராகன்களாகக் குறைத்து விட்டோம். முட்டை பெரிதாகவும் சாம்பல் நிறமாகவும் இருக்கிறது" என்றான் மட்டி.

"சரி அந்தக் குதிரை முட்டையிலிருந்து குதிரைக் குட்டியைப் பெறுவது எப்படி? இவ்வளவு குறைந்த விலையில் குதிரை முட்டையை விலை பேசி முடித்துள்ளீர்கள்! உங்கள் திறமையே திறமை!" என்றார் குரு.

"குருவே, முட்டையின் மேல் கோழி உட்கார்ந்து அடைகாப்பது போலவே அடைகாக்க வேண்டும்" என்றான் மடையன்.

"அவ்வாறு அடைகாத்தால் உயர்ந்த ரகக் குதிரைக் குட்டி பிறக்கும் குருவே" என்றான் மூடன்.

"யார் குதிரை முட்டையின்மேல் உட்கார்ந்து அடைகாப்பது?" என்றார் குரு.

"குருவே, யார் அடைகாக்க வேண்டும் என்பதை நீங்களே சொல்லிவிடுங்கள்" என்றான் முட்டாள்.

"குருவே சமையல் செய்வதுதானே என் வேலை. வேறு யார் குருவே என்னைப்போல் ருசியாகச் சமைப்பார்கள்? அதனால் முட்டாள் அடைகாக்கட்டுமே" என்றான் மடையன்.

"நீ சொல்வதும் சரிதான். அப்படியானால் முட்டாள் அடைகாக்கட்டுமே!" என்றார் குரு.

"குருவே, நீங்கள் நீண்ட ஆயுளோடு இருக்க ருசியான சாப்பாடு வேண்டும். சாப்பாட்டைச் சமைக்க விறகு வேண்டும். நாள்தோறும் நான்தானே காட்டுக்குச் சென்று விறகு கொண்டு வருகிறேன். ஆகையால் என்னால் முடியாது குருவே" என்றான் முட்டாள்.

"நீ சொல்வதும் சரிதான். பேதை அடைகாக்கட்டுமே" என்றார் குரு.

"குருவே நான்தானே குடிப்பதற்கும் சமைப்பதற்கும் குளத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறேன். என்னால் எப்படி அடைகாக்க முடியும்?" என்றான் பேதை

"நீ சொல்வதும் நியாயம்தான். அப்படியானால் மட்டி அடைகாப்பான்!" என்றார் குரு.

"குருவே நான் மாடுகளை மேய்க்க வேண்டும். மாலையில் அவைகளைக் கட்டி வைக்கோல் போடவேண்டும். என்னால் எப்படி முடியும் குருவே?" என்றான் மட்டி.

"நீ சொல்வதும் நியாயம்தான். அப்படியானால் மூடன் அடைகாப்பான்!" என்றார் குரு.

"குருவே, மடத்தைப் பெருக்கித் தண்ணீர் தெளித்துக் கோலம் போட வேண்டும். கடைக்குச் சென்று காய்கறிகள் வாங்கிவர வேண்டும். இத்தனை வேலைகள் இருப்பதால் என்னால் எப்படி அடைகாக்க முடியும் குருவே?" என்றான் மூடன்.

"மூடன் சொல்வதும் சரிதான். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை இருக்கின்றது. ஓய்வாக இருப்பவன் நான்தான். 21 நாட்கள் என்ன பிரமாதம்? நான் உட்கார்ந்து கொண்டு என் வேட்டியால் முட்டையை மூடிக்கொண்டு அடைகாக்கிறேன். அடைகாத்தால் உயர்ந்த ரகக் குதிரைக்குட்டி வெளியே வரும். நன்றாகத் தீனி கொடுத்து வளர்த்து வந்தால் பெரிய குதிரையாக வளரும். பெரிய குதிரையாக வளர்ந்தால், அடிக்கடி வெளியூர் செல்லலாம். வெளியூர் அடிக்கடி சென்றால் காணிக்கை அதிகமாகக் கிடைக்கும்" என்றார் குரு.

"ஆமாம் குருவே" என்றார்கள் சீடர்கள்.

குரு பத்து வராகன் பணத்தைக் கொடுத்தார். சீடர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டார்கள். குதிரை முட்டையைக் கொண்டுவர குரு உட்காரும் ஊஞ்சல் பலகையைத் தூக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாகத் தோட்டத்தை அடைந்தார்கள்.

தோட்டக்காரன் எல்லாவற்றையும் விற்றுவிட்டான். தோட்டத்தில் குதிரையும் இல்லை, குதிரை முட்டைகளும் இல்லை.

"தோட்டக்காரரே, எங்கே குதிரை முட்டை ஒன்றுகூட இல்லை!, விற்று விட்டீரா? நாங்கள் சொல்லிவிட்டுத்தானே போனோம். நீர் செய்தது கொஞ்சம்கூட நியாயமில்லை" என்றான் மட்டி.

"நீங்கள் விலை கேட்டுவிட்டுப் போய் இரண்டு நாட்களாக வரவில்லை. உடனே வருகிறோம் என்று சொல்லிவிட்டுத்தானே சென்றீர்கள். ஆனால், நீங்கள் சொன்னபடி வரவில்லை, விற்று விட்டேன்" என்றான் தோட்டக்காரன்.

"நாங்கள் நடந்து வரவே இரண்டு நாட்கள் ஆகிறது. எங்களை நீங்கள் ஏமாற்றிவிட்டீர்கள். நாங்கள் குதிரை முட்டை இல்லாமல் வெறுங்கையோடு போக மாட்டோம். என்ன செய்வீர்களோ, ஏது செய்வீர்களோ, எங்களுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் விற்றவனிடம் சென்றாவது ஒரு குதிரை முட்டை வாங்கிக் கொடுக்க வேண்டும்" என்றான் மடையன்.

"என் வீட்டிற்கு எடுத்துச் செல்ல ஒன்று மட்டும் எடுத்து வைத்திருக்கிறேன். அது மிகப் பெரிய குதிரை முட்டை. அதற்குப் பதினைந்து வராகன் கொடுத்தால்தான் கொடுப்பேன்" என்றான் தோட்டக்காரன்.

"தோட்டக்காரரே, நீங்கள் அநியாயமாக எங்களை ஏமாற்றுகிறீர்கள். எங்கள் குரு குதிரை முட்டைக்காகப் பத்து வராகன்தான் கொடுத்துள்ளார். எங்களிடம் வழிச் செலவுக்காக இரண்டு வராகன் இருக்கிறது. அந்த இரண்டு வராகனையும் கொடுக்கிறோம். எங்களிடம் வேறு ஒரு சல்லிக்காசுகூட இல்லை. உங்களுக்குப் புண்ணியமாக இருக்கட்டும்" என்று சொல்லி பணத்தைக் கொடுத்தான் மூடன்.

முட்டாள் சீடர்களுக்குப் பன்னிரண்டு வராகனுக்குப் பூசணிக்காயை விற்ற மகிழ்ச்சியில், பூசணிக்காயைக் குடிசையிலிருந்து கொண்டுவந்து கொடுத்து, "உங்கள் குருவிற்காகத்தான் குறைந்த விலைக்குக் கொடுத்துள்ளேன். போகும் வழியில் யாராவது விலையைக் கேட்டால் சொல்ல வேண்டாம்" என்றான் தோட்டக்காரன்.

குதிரை முட்டை வாங்கிய பெருமையைப் பேசிக் கொண்டே சீடர்கள் காட்டுவழியில் வந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் வரும் வழியில் இருபுறமும் அடர்ந்த புதர்களும் முட்செடிகளும் இருந்தன. ஓர் ஆலமரம் அடர்ந்து படர்ந்து தழைத்து இருந்தது. அம்மரத்தின் கிளை ஒன்று ஆள்உயரத்தில் தாழ்வாக இருந்தது. சீடர்கள் கொண்டுவந்த பூசணிக்காய் அக்கிளையால் தடுக்கப்பட்டுக் கீழே விழுந்து உடைந்து விட்டது.

உடைந்த பூசணிக்காயின் சத்தம் கேட்டுப் புதரில் உறங்கிக் கொண்டிருந்த சாம்பல் நிற முயல் ஒன்று பயந்து ஓடியது. பூசணிக்காயிலிருந்துதான் குதிரைக்குட்டி ஓடுகின்றது என்று நினைத்துக்கொண்ட சீடர்கள், ஊஞ்சல் பலகையை அங்கேயே போட்டுவிட்டு, அதன் பின்னால் ஓடினார்கள்.

"குட்டியாக இருக்கும்போதே குதிரைக்குட்டி இவ்வளவு வேகமாக ஓடுகின்றதே! அது வளர்ந்து பெரிய குதிரையானால் எவ்வளவு வேகமாக ஓடும்?" என்றான் பேதை.



சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த முயல் விரைவாக ஓடி இவர்கள் கண்ணிலிருந்து மறைந்தது. காட்டில் உள்ள முட்புதர்களில் புகுந்து தேடியதால், முட்களால் சீடர்களின் சட்டைகள் கிழிந்து, உடம்பில் இரத்தம் வடிந்தது.

சீடர்கள் குதிரை முட்டை இல்லாமல் மடத்திற்கு வந்தார்கள். சோர்ந்த முகத்துடனும் தளர்ந்த நடையுடனும் வருவதைக் கண்ட குரு "என்ன நடந்தது? ஏன் இப்படி உடலில் காயங்களுடன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

ஊஞ்சல் பலகையுடன் குதிரை முட்டை வாங்க மடத்திலிருந்து புறப்பட்டதிலிருந்து திரும்பி வந்து சேர்ந்ததுவரை ஒன்றும் விடாமல் குருவிற்குச் சீடர்கள் சொன்னார்கள்.

"எல்லாம் நன்மைக்கே" என்பதுபோல், அந்தக் குதிரைக்குட்டி ஓடிவிட்டதும் நல்லதுதான். ஏனென்றால் அது குட்டியாக இருக்கும் போதே இவ்வளவு வேகமாக ஓடினால், பெரியதாக வளர்ந்தால் எவ்வளவு வேகமாக ஓடும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். எனக்கோ வயதாகி விட்டது. அதன்மேல் ஏறி நான் சவாரி செய்தால் எங்காவது தள்ளிவிட்டு ஓடிவிடும்" என்று சொன்னார் குரு.

குருவின் சமாதானப் பேச்சைக் கேட்ட சீடர்கள் "ஆமாம் குருவே, அந்தக் குதிரைக்குட்டி ஓடிவிட்டதும் நல்லதுதான்" என்றார்கள்.

## அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| குரு | - | ஆசிரியர் / ஆன்மீகத் தலைவர் |
| பேதை | - | சீடர்களில் ஒருவன் (எதையும் பகுத்தறிந்து செயற்படத் தெரியாதவன்) |
| மடம் | - | குரு சீடர்களுடன் இருந்து பணிகளை மேற்கொள்ளும் இடம் |
| ஆசி | - | ஆசிர்வாதம் |
| எளிமை | - | சிக்கல் அற்ற தெளிவான தன்மை |
| சவாரி | - | அமர்ந்து செல்லும் பயணம் |
| மன்றாடி | - | கெஞ்சி வேண்டுதல் |
| காணிக்கை | - | பக்தி அல்லது மரியாதையின் அடையாளமாகக் கிடைக்கும் பணம் அல்லது பொருள் |
| மெச்சுதல் | - | பாராட்டுதல் / புகழ்தல் |
| வராகன் | - | ஒரு வகைக் காசு / பணஅலகு |
| அடைகாத்தல் | - | பறவை, முட்டைகளின் மீது குஞ்சு பொரிப்பதற்காகச் சிறகை விரித்து இருத்தல். |
| வைக்கோல் | - | நெல்மணிகள் நீக்கப்பட்டு உலர்த்திய நெற்பயிரின் தாள் |
| சல்லிக்காசு | - | மிகக் குறைந்த மதிப்புடைய நாணயம் |
| புதர்கள் | - | உயரம் அதிகம் இல்லாமல் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் தாவரத் தொகுதி |
| கிளை | - | மரத்தின் தொடர்ச்சியாக இலை, பூ, காய் ஆகியவற்றைத் தாங்கியிருக்கும் பகுதி |

## கிரகித்தற் பயிற்சி

1. *பரமார்த்த குருவின் சீடர்கள் யாவர்?*
2. *சீடர்கள் குருவிற்குக் குதிரை வாங்க முடிவுசெய்ததன் காரணம் யாது?*
3. *குதிரை வாங்கத் தேவையான பணம் எவ்வளவு எனக் குரு கூறினார்?*
4. *முட்டாள் சீடர்களுக்கு தோட்டக்காரர் பூசணிக்காயைக் கொடுத்த பின் கூறியது என்ன?*
5. *உடைந்த பூசணிக்காயிலிருந்து பாய்ந்தோடியது எதுவென* **சீடர்கள்** *நினைத்தார்கள்?*
6. *குதிரை முட்டை இல்லாது வந்த சீடர்களுக்கு குரு கூறிய ஆறுதல் யாது?*
7. *குதிரையைப் பெற குரு கையாள நினைத்த வழி யாது?*
8. *இப்பாடத்தின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட படிப்பினை என்ன?*
9. *பின்வருவன* ***யாரால், யாருக்குக் கூறப்பட்டது*** *என எழுதுக.*
   (அ) *“உங்களுக்கு வயதாகி விட்டது.”*
   (ஆ) *“உங்களுக்கு வெற்றியுண்டாகட்டும்.”*
   (இ) *“நான் மாடுகளை மேய்க்க வேண்டும்.”*
   (ஈ) *“நீங்கள் விலை கேட்டுவிட்டு இரண்டு நாட்களாக வரவில்லை.”*
   (உ) *“எல்லாம் நன்மைக்கே.”*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : குதிரை முட்டை என்ற கதையை உமது நண்பரிடம் சுவைபடத் தொகுத்துக் கூறுக.

செயற்பாடு 2 : இக்கதையில் உமக்குப்பிடித்த ஒரு பாத்திரத்தின் குணப்பண்புகளைப் பற்றி உமது நண்பருடன் கலந்துரையாடுக.

செயற்பாடு 3 : வேறு நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளில் இருந்து நீங்கள் தேடிப்பெற்ற சிறுகதையைத் தெளிவாக உச்சரித்து வாசியுங்கள்.

செயற்பாடு 4 : நண்பர்களுடன் குழுவாகச்செயற்பட்டு இப்பாடத்தில் வரும் ஓவியங்களைப் பார்த்து அவை வெளிப்படுத்தும் கருத்துக்கள் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

## மொழிவளம்

### ஒத்த கருத்துச் சொற்கள்

**பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்.**

★ ஓட்டப் போட்டியில் சுபா *வாகை* சூடினாள்.
★ *சாலை* விதிகளை அனைவரும் பின்பற்றுவோம்.

இந்த வாக்கியங்களில் இடம் பெறும் *வாகை, சாலை* ஆகிய சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்களையும் பயன்படுத்த முடியும்.

*வாகை* - வெற்றி
*சாலை* - வீதி, பாதை
} இதனை நாம் ஒத்த கருத்துள்ள சொற்கள் என்போம்.

இவ்வாறு ஒத்த கருத்துள்ள சொற்கள் தமிழில் பல உள்ளன. இவற்றை அறிந்து பொருத்தமாக வாக்கியங்களில் கையாள்வோம்.

1. வையகம் போற்ற வாழ்வோம். - உலகம்
2. அறிவியல் நூல்கள் தமிழில் எழுதப்பட வேண்டும் - விஞ்ஞானம்
3. மன்னனின் ஒளி எங்கும் பரவியது. - புகழ்
4. அஞ்ஞானத்தை அகற்றுவோம். - அறியாமை
5. கண்மணியே துயில் கொள்வாய். - நித்திரை
6. குழவியின் தளர் நடை இனிமையானது. - குழந்தை
7. பாம்பு புதர்களுக்குள் மறைந்து கொண்டது. - சிறுபற்றை
8. குடி உயரக் கோன் உயர்வான். - மக்கள்
9. குடி உயரக் கோன் உயர்வான். - அரசன்
10. கடலில் ஞாயிறு விழுந்தது. - சூரியன்

# இலக்கணம்

## வாக்கிய அமைப்பு

பின்வரும் உதாரணங்களை அவதானிப்போம்.

1. வா.
2. இங்கே வா.
3. தம்பி இங்கே வாருங்கள்.

முதலாவது உதாரணம் தனிச் சொல்லாக அமைந்துள்ளது. யார்? எங்கே? என்ற விளக்கத்தை இச் சொல் தரவில்லை.

இரண்டாவது உதாரணம் எங்கே வரவேண்டும் என்பதற்கு விளக்கம் தருகிறது. ஆனால் யார் வரவேண்டும் என்ற விளக்கத்தை இத் தொடர் தரவில்லை

மூன்றாவது உதாரணம் **யார், எங்கே,** வரவேண்டும் என்பதற்கு விளக்கம் தருவதாக அமைந்துள்ளது. ஆகவே **'தம்பி இங்கே வாருங்கள்'** என்ற உதாரணத்தையே வாக்கியமாகக் கொள்வோம்.

சொற்கள் ஒரு ஒழுங்கு முறையில் அமைந்து முற்றுப்பொருளைத் தருமாயின் அதனை வாக்கியம் என்பர்.

★ அவன் மரத்தை வெட்டினான்.
★ ரோகினி தம்பியோடு விளையாடினாள்.
★ மாணவர்கள் வகுப்பறையைச் சுத்தம் செய்தனர்.
★ பூனை எலியைத் துரத்தியது.
★ மாடுகள் வயலை உழுதன.

இவ்வாறு எழுவாயிற்கும் பயனிலைக்குமிடையே திணை, பால், எண், இடம் ஆகியவற்றின் அடிப்படையில் உறவுடையதாய் அமைந்து, முற்றுப் பொருள் தருவதனை வாக்கியம் எனலாம்.

நான், குமார், மன்னார், கவிதை, பாடு

இத்தனிச் சொற்களைப் பொருத்தமாகத் தொடர்பு படுத்தும்போது பின்வருமாறு வாக்கியங்களை அமைக்க முடியும்.

(1) நான் மன்னாருக்குப் போனேன்.
(2) நானும் குமாரும் மன்னாருக்குப் போனோம்.
(3) நான் குமாரைப் பற்றிப் பாடினேன்.
(4) நானும் குமாரும் மன்னாருக்குப் போய்ப் பாடினோம்.
(5) குமார் மன்னாருக்குப் போனார்.
(6) குமார் மன்னாரைப்பற்றிப் பாடினான்.
(7) குமார் என்னைப்பற்றிப் பாடியுள்ளான்.

இவ்வாறு இச்சொற்களைப் பயன்படுத்தி இன்னும் பல வாக்கியங்களை ஆக்க முடியும்.

இந்த வாக்கியங்களில் இடம்பெறும் நான், குமார், மன்னார் ஆகிய சொற்கள் பெயர்ச் சொற்களாகும். இச்சொற்களைப் பின்வரும் சொற்களைப் பயன்படுத்திச் சிறப்பித்துச் சொல்லமுடியும்.

★ சிறியவனாகிய நான்
★ பெரியவனாகிய குமார்
★ நல்லவனாகிய நான்
★ அழகிய மன்னார்
★ அழகு மன்னார்

இங்கு சிறியவன், பெரியவன், நல்லவன், அழகிய, அழகு போன்ற சொற்கள் அடுத்து வருகின்ற பெயர்ச்சொற்களைச் சிறப்பித்து வந்துள்ளன. இவ்வாறு பெயர்ச் சொற்களைச் சிறப்பிக்கும் சொற்களை **பெயரடைகள்** என்போம்.

★ வேகமாகப் போனேன்.
★ இனிமையாகப் பாடினேன்.
★ மெதுவாகப் போனேன்.
★ மெல்லப் பாடினேன்.

இவ்வாறு வினைச் சொற்களுக்கு முன்னால் இடம் பெற்று வினைச் சொல்லின் பொருளைச் சிறப்பிக்கும் சொற்களை **வினையடைகள்** என்போம்.
பெயரடைகள் வினையடைகளைப் பயன்படுத்திப் பின்வருமாறு வாக்கியங்களை அமைக்கலாம்.

1 சிறியவனாகிய நான், அழகிய மன்னாருக்கு விரைவாகப் போனேன்.
2. பெரியவராகிய குமாரும் சிறியவனாகிய நானும் அழகிய மன்னாருக்கு விரைவாகச் சென்று இனிமையாகப் பாடினோம்.

## பயிற்சி

1 கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி முற்று வாக்கியங்களை ஆக்குவோம்.

1. காதர் நன்றாகப் ....................(பாடுவான், பாடினாள், பாடுவர்)
2. நாங்கள் கண்டிக்குப் ....................(போனோம் , போனார், போனது)
3. பறவைகள் கூட்டிலிருந்து....................(பறந்தன, பறந்தது, பறந்தனர்)
4. ....................ஆசிரியரைக் கண்டேன். (நாம், நாங்கள், நான்)
5 ....................கொழும்புக்கு வந்தான். (கமலா, தம்பி, அவர்கள்)

2. பின்வரும் பெயரடைகள், பெயர்ச் சொற்கள், வினையடைகள், வினைச்சொற்கள் ஆகியவற்றை பயன்படுத்தி ஐந்து வாக்கியங்கள் அமைக்குக.

| பெயரடைகள் | பெயர்ச்சொற்கள் | வினையடைகள் | வினைச்சொற்கள் |
|---|---|---|---|
| இனிய | பாடல் | மெல்ல | கேட்டேன் |
| நல்ல | படம் | இரசித்து | பார்த்தேன் |
| சிறிய | பழம் | விரும்பி | உண்டேன் |